திரு. எல். பலராமன் : தனியார் நடத்தும் இப்படிப்பட்ட நர்சரி பள்ளிகள் சிறந்த முறையில் நடப்பதால், தங்கள் குழந்தைகளுக்கு அதில்தான் நல்ல எதிர்காலம் இருக்கின்றது என்று ஓரளவிற்குப் பெற்றோர்கள் எண்ணுகின்றார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படியானால், அவற்றை ஊக்குவிக்க அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமா ? அல்லது இவற்றுக்குப் பதிலாக வேறு பள்ளிகளை நடத்துவதற்கு அரசு மாற்றுவழிகளைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன். காரணம் அப்படிப்பட்ட கல்விக்கூடங்கள் நல்ல முறையில் நடக்கின்றன என்பதை இந்த அவையிலேயே பலர் ஒப்புக்கொள்ளுவார்கள் என்று எண்ணுகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட நர்சரி பள்ளிகளின் தரம்தான் சிறந்தது என்று எண்ணுவதை, இந்த நாட்டிலே மக்களிடையே உள்ள பல்வேறு மூட நம்பிக்கைகளிலே இதுவும் ஒன்று என்றே கருத வேண்டியிருக்கின்றது. அதே நேரத்தில், இந்த நர்ஸரி பள்ளிகள் முறையாக ஒழுங்காக நடப்பதற்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அதிலே 'பிளாக் மார்க்கெட்' உருவாகாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Thiru A. R. DAMODARAN: Sir, I wish to explain my point. When I said " black-marketing in education ", I merely wanted to say that there were some nursery schools which were levying Rs. 100 and Rs. 120 per month. So, to check the levy of such exorbitant fees, I would like the Government to consider whether they should not start fee-levying nursery schools so that this levy of high fees could be checked.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கருத்துக்களை, யோசனைகளை நான் கவனத்தில் எடுத்துக்கொள்ளுகிறேன்.

Advisory Committees for Colleges in Madurai District.

* 161 Q.—Thiru K. S. GANAPATHI (on behalf of Thiru G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal to form Advisory Committees for the Colleges in Madurai district;

(b) if so, the details thereof; and

(c) whether such Committees will be formed in other places of the State?

1978 மார்ச் 1]

மதுரை மாவட்டத்திலுள்ள கல்லூரிகளுக்கு ஆலோசனைக் குழுக்கள்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள கல்லூரிகளுக்கு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை ?

(உ) அதுபோன்ற ஆலோசனைக் குழுக்கள் மாநிலத்தின் பிற இடங் களிலும் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆலோசனைக்குழு என்ற பெயரில் இல்லை. மாணவர் நலக்குழு என்று செயல்பட்டு வருகிறது.

(இ) மாணவர் நலக்குழு அமைப்பில் கீழ்க்கண்டவர்கள் அங்கம் வகிக் கின்றனர் :—

1. கல்லூரி முதல்வர் (கன்வீனர்)
2. கல்லூரி ஆசிரியர்களில் மூத்தவர் ஒருவர்
3. கல்லூரி நிர்வாகத்தினரிலிருந்து ஒருவர்
4. பெற்றோர் சங்கச் சார்பில் இருவர் அல்லது பெற்றோர் சங்கம் இல்லையேல் கல்லூரி முதல்வரால் அங்கீகரிக்கப்பட்ட இரு பெற்றோர்
5. மாணவர் மன்றத் தலைவரும் செயலாளரும் அல்லது மாணவர் சார்பில் இருவர்
6. அரசாங்கத் துறையில் வருவாய்த்துறை மற்றும் காவல்துறை அலுவலர்கள்

(உ) ஆம். அமைக்கப்படும்.

திரு. கே. எஸ். கணபதி: இந்த மாணவர் நலக் குழுவின் கருத்துக்கள் அல்லது பரிந்துரைகள் எப்படி இருக்கலாம், எதைப் பற்றி இருக்கலாம், எதைப் பற்றி அவர்கள் பேசலாம், எதைப் பற்றி அவர்கள் பேசக்கூடாது என்ற விதி முறைகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆரம்பத்தில் பல்வேறு மாணவர்கள் போராட்டம் நடைபெற்ற நேரத்தில், அவற்றில் பல ஒரு தனிப்பட்ட கல்லூரியில் தோன்றியதை அடிப்படையாகக் கொண்டுதான் போராட்டம் நடைபெற்றது என்று அரசு அறிந்து, ஒரு கல்லூரிக்குள் ஏற்படும் பிரச்சினை யைச் சுலபமாகத் தீர்த்து வைப்பதற்கு இப்படிப்பட்ட மாணவர் நலக் குழு

இருந்தால் நலமாக இருக்கும் என்று கருதி, இக்குழுக்கள் கல்லூரிகளில் தோற்றுவிக்கப்பட்டன. இப்படிப்பட்ட குழுக்கள் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுத்துக்கொண்டால், பிரச்சினைகள் அக் கல்லூரியோடு முடிவுற்று பல கல்லூரிகளுக்குப் பரவாத நிலை உருவாகும் என்று அந்த அடிப்படையில் தான் இவை தோற்றுவிக்கப்பட்டன.

திரு. வே. தங்கப்பாண்டியன் : கல்லூரிகளில் மாணவர்கள் போராட்டம் என்று தோன்றும்போது, அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு இத்தகைய குழுக்கள் உதவிகரமாக இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பல்வேறு சந்தர்ப்பங்களில் பலன் ஏற்பட்டுள்ளதாகத்தான் அரசு கருதுகிறது. எனவே எல்லாக் கல்லூரிகளிலும் இத்தகைய குழுக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் அரசு இதுபற்றி யோசனை கூறியிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : அரசு எல்லாக் கல்லூரிகளிலும் இத்தகைய குழுக்களை அமைக்க வேண்டுமென்று விரும்பி அதற்கான சுற்றறிக்கையை அனுப்பியுள்ளது என்று கருதுகிறேன். ஆனால் பல கல்லூரிகளிலே இன்னும் இப்படிப்பட்ட குழுக்கள் அமைக்கப்படாமல் இருக்கின்றன. அந்த முறையில் எவ்வளவு கல்லூரிகளில் அவை அமைக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உறுப்பினர் அவர்களே ஒரு கல்லூரியின் தலைவராக இருக்கின்றார். அவர் அக் குழுவினை தமது கல்லூரியில் அமைத்திருப்பார் என்று கருதுகிறேன். ஆனால் எவ்வளவு கல்லூரிகளில் இன்னும் ஏற்படுத்தப்படாமல் இருக்கின்றது என்பதை அறிய தனிக் கேள்வி போட்டால் பரவாயில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, இந்த உத்தரவு பிறப்பிக்கப் படுவதற்கு முன்பே எனது கல்லூரியில் அத்தகைய ஒரு குழுவினை ஏற்படுத்தி யிருக்கிறோம். அது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அது ஏற்படுத்திய அன்று முதல் இன்று வரையில் ஸ்ட்ரைக்கோ வேறு எந்தவித மான தொல்லையோ ஏற்பட்டது கிடையாது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். கல்லூரி ஹாஸ்டல் பிரச்சினை, மாணவர்களுக்கு வேண்டிய சிறு வசதிகள் இவற்றை அவ்வப்பொழுது கவனித்துவிட்டால், எந்தத் தொல்லையும் ஏற்படுவதில்லை. இக்குழு நல்ல முறையில் செயல்பட்டால், பல பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்து வைக்க முடிகின்றது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1978 மார்ச் 1]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : விவாதம் அல்லது கேள்விகள் தனி நபர்களின் சொந்தப் பிரச்சினையையொட்டியதாக இருத்தல் கூடாது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதிலிருந்து அந்தக் குழுவினால் நல்ல பலன்கள் கிடைத்து வருவதாகத் தெரிகின்றது. எனவே நிச்சயமாக அதைத் தீவிரப்படுத்துவதற்கும் அதை மேலும் நல்ல முறையில் செயல்படுத்துவதற்கும் அரசு ஆவன செய்யும்.

திரு. கே. எஸ். கணபதி : இக்குழு கல்லூரி நிர்வாகத்தில் தலையிட உரிமை பெற்றிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் குழு எந்தச் சட்டத்தின் அடிப்படையிலும் அமைக்கப்பட்டதல்ல. ஆலோசனைக் குழுதான் அது. அதிலே கல்லூரி நிர்வாகம், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், அதிகாரிகள் ஆகியோர்களுடைய பிரதிநிதிகள் இடம் பெற்றிருக்கின்றார்கள். கல்லூரிகள் நல்ல முறையில் இயங்க வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டு அமைக்கப்பட்ட குழு அது. அந்த முறையில், சட்டங்கள் சொல்லுவதைக் காட்டிலும் இவ்வளவு பேர் பங்குகொண்டுள்ள இக்குழுவின் கருத்துக்களுக்கு அதிக முக்கியத்துவம் இருக்கும், நல்ல முறையில் மதிக்கப்படும் என்று கருதுகிறேன்.

Nagercoil Co-operative Housing Society.

* 162 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Nagercoil Co-operative Housing Society has not sanctioned any loan for constructing house for the last two years; and

(*b*) if so, the reason therefore?

நாகர்கோவில் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாகர்கோவில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம், கடந்த இரண்டு வருடங்களாக வீடு கட்ட கடன் எதுவும் வழங்க வில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குக் காரணம் யாது?